# "நீங்கள் மறுபடியும் பிறக்க வேண்டும்" (3:1-36)

*உண்மையில் முற்றிலும் மாறுபட்டவைகளாய் இருக்கின்ற விஷயங் களுக்கிடையில் நாம் சில வேளைகளில் சிறிதளவே வேறுபாட்டைக் காண்கின்றோம். நானும் என் மனைவியும் புதிதாய்த் திருமணமானவர் களாய் இருந்த பொழுது எங்களது நண்பர் வீட்டிற்குச் சென்றதை நான் மீண்டும் நினைத்துப் பார்க்கின்றேன். கல்லூரியில் என் மனைவியின் மிகச் சிறந்த தோழிகளில் ஒருத்தியாயிருந்த இந்தப் பெண்மணியும் சமீபத்தில் தான் திருமணம் முடித்திருந்தார், மற்றும் நாங்கள் அப்பெண்மணியின் கணவரைப் பற்றிக் கேள்விப்பட மிகவும் ஆவலுள்ளவர்களாய் இருந்தோம். நாங்கள் ஒருபோதும் சந்தித்திராத அந்த மனிதரைப் பற்றி அறிய நாங்கள் எவ்வளவோ முயற்சி செய்தாலும், அவரது மனைவி அவரைப் பற்றிச் சிறிதளவே கூறினார்கள். கடைசியில் எனது மனைவி, "அவரைப் பற்றி எங்களுக்குக் கூறு! அவர் எப்படியிருப்பார்?" என்று வற்புறுத்தினாள். எங்களது தோழி என் மனைவியிடம் திரும்பி, "நீ அறிந்திருக்க வேண்டுமே. நீ ஒருவரைப் பெற்றுள்ளாயே!" என்று கூறினார்கள். ஒரு கணவர் என்ற வகையில் நான், சில பெண்கள் நினைப்பதாகக் காணப்படுவதைக் காட்டிலும் அதிகமான வேறுபாடுகள் ஆண்கள் மத்தியில் உள்ளன என்று நிச்சயமாக நம்புகின்றேன்!*

விசுவாசத்திற்கு இதே விதமான அணுகுமுறையைக் கையாளுவது பற்றி யோவான் 3 எச்சரிக்கின்றது. "விசுவாசம் விசுவாசம் தான்" அல்லது "எல்லா விசுவாசமும் ஒன்றுபோலத் தான் உள்ளது!" என்று கூறும்படியாக நாம் சோதிக்கப்படலாம். நிக்கொதேமு என்னும் பெயருடைய ஒரு மனிதருட னான இயேசுவின் சந்திப்பானது உண்மையான விசுவாசத்திற்கும் மற்றும் தாழ்வான அல்லது போலியான விசுவாசத்திற்கும் இடையில் வேறுபாட்டைக் காணத்தவறுதல் பற்றி அறைகூவல் விடுக்கின்றது. விசுவாசத்தை உண்டாக்குவதற்காகவே யோவான் சுவிசேஷம் எழுதப்பட்டது (20:31), எனவே தாம் உண்டாக்க விரும்பிய விசுவாசம் பற்றிக் கவனமாக விளக்கம் தருவது என்பது யோவானுக்கு மிகவும் முக்கியமானதாயிருந்தது.

யோவான் 3ன் படிப்பானது உண்மையில் 2:23ல் தொடங்குகின்றது, அது இயேசு பஸ்காவுக்காக எருசலேமில் இருந்தார் என்று கூறுகின்றது.

இந்தப் பண்டிகையில் அவர் அடையாளங்களை நிகழ்த்தினார், மற்றும் மக்கள் அவர்மீது நம்பிக்கை கொண்டனர். இந்த விவரத்தின் வேளையில், இயேசு எதை நிறைவேற்ற வந்தாரோ அதை அவர் நிறைவேற்றிக் கொண்டிருந்தார் என்று காணப்படுகின்றது. இருப்பினும், இயேசு ''எல்லாவற்றையும் அறிந்திருந்தபடியால், அவர்களை நம்பி இணங்கவில்லை'' (2:24) என்று யோவான் எழுதினார்.

## விசுவாசமாய் இராத விசுவாசம்

இந்தத் தொடக்க கால விசுவாசிகள் தங்கள் விசுவாசத்தில் நிறைவில் எவ்விடத்தில் இருக்கும்படி இயேசு விரும்பினாரோ, அவ்விடத்தில் இருந்ததில்லை. அவர்கள் விசுவாசம் கொண்டிருந்தார்கள், ஆனால் அது இயேசு உண்மையில் யார் என்பதை அவர்கள் முழுமையாகப் புரிந்து கொள்ள அனுமதிக்கின்ற விசுவாசமாய் இருந்ததில்லை. இயேசு தம்மைப் பற்றியும், தேவனுடைய இராஜ்யத்தைப் பற்றியும் அதிகமாய் உரையாற்ற விரும்பினார், ஆனால் அப்படிப்பட்ட கருத்துக்கள் மக்களின் பெரிய குழுவினருடன் கலந்துரையாடுவதற்கு மிகவும் கடினமானவைகளாய் இருந்தன. இதன் விளைவாக, இயேசுவுக்கும் நிக்கொதேமுவுக்கும் இடையில் தனிமையாக இரவு வேளைச் சந்திப்பில் நடைபெற்ற உண்மையான கிறிஸ்த விசுவாசம் பற்றிய உரையாடலை யோவான் எடுத்துரைத்தார்.

யோவான் சுவிசேஷத்தில் மட்டுமே காணப்படுகின்ற இந்த நிக்கொதேமு, "யூதருக்குள்ளே அதிகாரியான நிக்கொதேமு என்னப்பட்ட பரிசேயன் ஒருவன் இருந்தான்" (3:1) என்று அறிமுகப் படுத்தப்படுகின்றார். "அதிகாரி" என்ற சொற்றொடரானது அவர், அந்த வேளையில் யூதர்கள் மீது ஆட்சி செலுத்திய எழுபது மனிதர்களைக் கொண்ட புகழற்ற ஆலோசனைக் குழுவான யூத சனதெரீன் சங்கத்தின் உறுப்பினராய் இருந்தார் என்பதைச் சுட்டிக்காட்டுகின்றது. இப்படிப்பட்ட ஒரு பதவியுடன் அதிகாரம், செல்வம் மற்றும் கௌரவம் ஆகியவை வந்தன, இவ்விதமாக அது நிக்கொதேமுவை யூத சமூகத்தின் உயர் குடி உறுப்பினராக்கியிருந்தது. பிற்பாடு, இயேசுவும் கூட இவரை "இஸ்ரவேலுக்குப் போதகன்" (3:10) என்று குறிப்பிட்டார். நிக்கொதேமுவைப் போன்ற பதவியில் இருந்தவர்கள் இயேசுவுக்குத் தீவிரமான விரோதிகளாய் இருந்தனர். இருப்பினும், நிக்கொதேமு தேடும் இருதயத்தைக் கொண்டிருந்தார்; எனவே அவர் இயேசு யார் என்பதை விசாரிப்பதற்காக அவரிடத்தில் இரவு வேளையில் வந்தார்.

விசுவாசத்தைப் பற்றிய ஒரு விளக்கத்துடன் நிக்கொதேமு தமது உரையாடலை இயேசுவிடம் தொடங்கினார். அவர், "ரபீ, நீர் தேவனிடத் திலிருந்து வந்த போதகர் என்று அறிந்திருக்கிறோம், ஏனெனில் ஒருவனும் தன்னுடனே தேவன் இராவிட்டால், நீர் செய்கிற இப்படிப்பட்ட அற்புதங்களைச் செய்ய மாட்டான்" (3:2) என்று கூறினார். குறைந்தபட்சம் அவர், இயேசு அற்புத அடையாளங்களைச் செய்தார் என்றும், இயேசு

தம்முடைய வல்லமையைத் தேவனிடத்திலிருந்து பெற்றார் என்றும் விசுவாசிப்பதாக உரிமைகோரினார். இவ்வசனப் பகுதியை முதல் முதலாக வாசிக்கும் வாசகர் இயேசு நிக்கொதேமுக்குப் பதில் அளித்த வகையைக் கண்டு அதிர்ச்சி அடையக் கூடும். யாரேனும் ஒருவர், "நிக்கொதேமு அவர்களே, நன்றி. உங்கள் மதிப்புரையை நான் பாராட்டுகின்றேன், உங்கள் உற்சாக மூட்டும் வார்த்தைகளையும் நான் பாராட்டுகின்றேன், விசேஷமாக இப்படிப்பட்டதொரு ஒப்புக் கொள்ளுதலானது சனதெரீனில் உள்ள உங்கள் நண்பர்களிடம் மிகப் புகழ் பெறாது என்பதை அறிந்துள்ளதால் நான் உங்களை பாராட்டுகின்றேன்'' என்று கூறுவாரென்றே நாம் சாதாரணமாக எதிர்பார்ப்போம். இருப்பினும் இயேசு, எதிர்பாராத வகையில் ''ஒருவன் மறுபடியும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தைக் காண மாட்டான் என்று மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன்'' (3:3) என்று பதில் அளிக்கையில் அவர் நிக்கொதேமுவை உண்மையில் தாக்கிப் பேசினார்.[1]

"மறுபடியும்" அல்லது "மேலிருந்து" என்று அர்த்தப்படக் கூடிய *anothen* என்ற கிரேக்க வார்த்தையை இயேசு பயன்படுத்தியது நிக்கொதேமுவை விசேஷமாகக் குழப்பம் கொள்ளச் செய்தது.[2] தொடர்ந்து நடந்த உரையாடலானது ஏறக்குறைய இரண்டு மாறுபட்ட மொழிகளினால் ஆன உரையாடல் போலவே இருந்தது. இயேசு "உன்னதத்திலிருந்து வந்த'' மொழியைப் பயன்படுத்த, நிக்கொதேமு ''பூமியின்'' மொழியைப் பயன்படுத்தினார் (3:31). தேவனுடைய வல்லமையினாலான ஆவிக்குரிய மறுபிறப்பின் அவசியத்தை இயேசு அறிவித்துக் கொண்டிருக்க, ஒரு மனிதர் தமது தாயின் கர்ப்பத்தில் மீண்டும் புகுந்து பிறக்க முடியுமா என்பதைப் புரிந்து கொள்ள நிக்கொதேமு முயற்சி செய்து கொண்டிருந்தார்! இயேசுவின் இரவு நேரப் பார்வையாளர், நாசரேத்திலிருந்து வந்த அந்தப் போதகரைப் பற்றிக் கணிசமான அளவு ஆர்வம் உடையவராய் இருந்தும், அவர் இன்னமும் முற்றிலும் மனித வழக்கத்தின்படியே சிந்தித்துக் கொண்டிருந்தவராகவும் தேவனுடைய இராஜ்யத்தினுள் இன்னமும் பிரவேசியாதவராகவும் காணப்பட்டார். நிக்கொதேமுவை இயேசு எதிர்த்து நின்று, குத்திக்காட்டி, அறைகூவல் விடுக்கையில் அவர் (இயேசு) உண்மையான விசுவாசத்தை விளக்கப்படுத்தினார். முதலாவதாக, தேவனுடைய இராஜ்யம் எதுவாயிருப்பதில்லை என்பதற்கான இரு விஷயங்களைத் தெளிவாகச் சுட்டிக் காட்டினார்.

### மதத்தின் மத நடவடிக்கைகள் அல்ல

''மதம்'' என்ற வார்த்தையானது மிகவும் பெரிய அளவில் வித்தியாசமான அர்த்தங்களைக் கொண்டதாக உள்ளது. நேர்மறையான பகுதியில் அது "தேவனுக்கு ஊழியம் மற்றும் ஆராதனை"[3] என்று அர்த்தப் பட முடியும். எதிர்மறையான பகுதியில் அது, "மத எண்ணப்போக்குகள், நம்பிக்கைகள் மற்றும் நடைமுறைகள் ஆகியவற்றின் நிறுவனமாக்கப்பட்ட அமைப்பு"[4] என்று அர்த்தப்பட முடியும். இந்தப் பிந்திய அர்த்தம்தான் மேலிருந்து வருகின்ற ஒரு புதிய பிறப்பினாலேயே தேவனுடைய

இராஜ்யத்தில் பிரவேசிக்க முடியும் என்ற இயேசுவின் வலியுறுத்துதலினால் கடுமையாகத் தாக்கப்பட்டது. நிக்கொதேமு தமது பதவியின் காரணமாக உண்மையிலேயே ஒரு தீவிரமான பிரமாணக் கடைப்பிடிப்பாளராக இருந்தார். நியாயப் பிரமாணத்தைக் கடைப்பிடித்தல் என்பது தேவனுடைய இராஜ்யத்திற்குள் நுழையப் போதுமானதல்ல என்று இயேசு கூறிக் கொண்டிருந்தாரா? ஆம், முற்றிலும் சரியே! பூமிக்குரிய சிந்தையினால் கட்டப்பட்ட மனம் கொண்டிருந்த நிக்கொதேமு அவரிடத்தில் கூறப்பட்டதைப் புரிந்து கொள்ள முடியாதவராய் இருந்தார்.

மறுபடியும் பிறத்தல்/மேலிருந்து பிறத்தல் பற்றிய இயேசுவின் அறிவித்தலுக்கு நிக்கொதேமு குழப்பத்துடன் பதில் அளித்த பொழுது, இயேசு தாம் கூறியதை இந்த வேளையில் ''மறுபடியும் பிறத்தல்'' என்பதற்குப் பதிலாக "ஜலத்தினாலும் ஆவியினாலும்" (3:5) என்பதைக் கொண்டு மீண்டும் எடுத்துரைத்தார். "தண்ணீர் மற்றும் ஆவி" என்பது இந்த உரையாடலில் ஞானஸ்நானத்தின் கருத்தை அறிமுகப்படுத்தியது.[5] ''தண்ணீர்'' என்பது அவர் சுத்திகரிக்கப்படுதல் தேவை என்று அர்த்தப் படுத்தியது, "ஆவி" என்பது பரிசுத்த ஆவியானவரின் வல்லமையைத்தவிர குறைவான வல்லமை எதுவும் நிக்கொதேமுவை மாற்ற முடியாது என்று அர்த்தப்படுத்தியது. இப்படிப்பட்டதொரு கருத்தானது நிக்கொதேமுக்கு குறைந்தபட்சம், குழப்பமூட்டுவதாகவும் மற்றும் ஒருவேளை அவமானப்படுத்துவதாகவும் இருந்தது.

இயேசுவின் ஊழிய காலத்திற்கு முன்பு, ஒரு புறஜாதியார் யூதராக முடிவு மேற்கொள்ளும் பொழுது ஞானஸ்நானம் என்பது யூதத்துவத்தால் பொதுவாக நடைமுறைப் படுத்தப்பட்டது. விருத்தசேதனம், பலி மற்றும் ஞானஸ்நானம் ஆகியவை ஒரு யூதராவதற்கு (ஒரு யூதமார்க்கத்தமைந்தவர்) அவசியமான மூன்று செயல்களாய் இருந்தன. யூதர்களுடைய சனதெரீன் சங்கத்தின் முன்னோடி உறுப்பினர் ஒருவருக்கு அவர் ஞானஸ்நானப் படுத்தப்பட வேண்டும் என்று ஆலோசனை தெரிவிப்பதென்பது நினைத்துப் பார்க்க முடியாததாக இருந்தது. எல்லாச் சட்டங்களையும் கடைப்பிடித்தல் என்பது தேவனுடைய இராஜ்யத்தில் பிரவேசிப்பதற்கான வழியல்ல என்று இயேசு வலியுறுத்தினார்; தேவனுக்கு முன்பாக தன்னையே தாழ்த்துகின்ற இருதயமும் தேவனுடைய கண்களில் அந்த இருதயத்தைப் புதிதாக மாற்றும்படி பரிசுத்த ஆவியானவரை அனுமதிப்பதுமே இதற்கு முக்கியமானவைகளாகும்.

இடர்ப்படுத்துதலை விட்டு நீங்கியிருந்து, மற்றவர்களைத் துன்புறுத் தாமல் இருந்தால் அதுவே தேவனைத் திருப்திப்படுத்தப் போதுமானது என்று இன்றைய நாட்களில் புகழ் பெற்றுள்ள ஒரு கருத்தை மக்கள் கொண்டுள்ளனர். நமது வேத பாடப் பகுதியானது இப்படிப்பட்டதொரு கண்ணோட்டத்திற்குத் தைரியமாய் எதிர் நிற்கின்றது. இயேசு நிக்கொதேமுவிடம் செய்தது போலவே நம் முன்பாக நின்று, "நீங்கள் மறுபடியும் பிறக்க வேண்டும்!" என்று கூறுகின்றார்.

## தனிப்பட்ட உறுதிப்பாட்டின் விஷயம் மட்டுமல்ல

நிக்கொதேமு ஏன் இரவு வேளையில் இயேசுவிடம் வந்தார் என்று நீங்கள் நினைக்கின்றீர்களா? அது அவ்விருவருக்கும் வசதியான நேரமாக மட்டும் இருந்ததினாலா? போதகர்கள் அடிக்கடி போதித்தபடி, அது படிப்பதற்கு உன்னதமான நேரமாயிருந்ததா? நல்ல பகல் வேளையில் இயேசுவிடம் வருவதற்கு நிக்கொதேமு பயப்பட்டாரா? யோவானின் எழுத்துக்களில் இருள் என்பது ஒரு திறவுகோல் கருத்தாக உள்ளது, மற்றும் இரவு வேளைகளில் சந்திப்பது என்பது இன்னமும் ஆவிக்குரிய இருளில் இருந்த ஒருவருக்கு ஏற்புடையதாகவே இருந்தது (யோவா. 3:19-21). அவர் (நிக்கொதேமு) இன்னமும் இயேசுவினிடத்தில் தமக்குள்ள பற்றைப் பற்றி வெளிப்படையாய் அறிவிக்கத் தடை செய்த வல்லமையின் பதவி யொன்றைப் பிடித்துத் தொங்கிக் கொண்டிருந்தார். இயேசு நிக்கொதே முவை நீரினாலும் ஆவியினாலும் மறுபடியும் பிறக்கும்படி அழைத்த பொழுது, அவர் (இயேசு) மற்ற விஷயங்களுக்கு மத்தியில், அவரை (நிக்கொதேமுவை) விசுவாசம் கொள்ளும்படியும், தமது விசுவாசத்தை ஞானஸ்நானம் என்ற வெளிப்படையான செயல் மூலம் விளக்கப்படுத்தும் படியும் அழைத்தார். இப்படிப்பட்ட கருத்தானது தாயின் கர்ப்பத்தினுள் மீண்டும் செல்வது என்ற கருத்தைப் போலவே நிக்கொதேமுவுக்கு நினைத்துப் பார்க்க முடியாததாக இருந்திருக்கும் என்பது உறுதி!

யோவான் சுவிசேஷத்தில் நிக்கொதேமு மற்றும் இரண்டு முறைகள் தோன்றுகின்றார். அடுத்த முறை நாம் அவரை, கூடாரப் பண்டிகையின் போது சனகெரீன் சங்கத்தார் இயேசுவைக் கைது செய்து கொல்ல முயற்சி செய்த வேளையில் (7:50-52) சந்திக்கின்றோம். அந்த வேளையில் அவர் இயேசுவின் மீது தமக்குள்ள ஆர்வம் பற்றி இன்னமும் அமைதியாய் இருந்தார், ஆனால் ஆலோசனைச் சங்கமானது இயேசுவுக்கு "உரிய அவகாசம்" தர வேண்டும் என்று வாதிடப் போதுமான தைரியம் கொண்டிருந்தார். சனகெரீன் சங்கத்தில் இருந்த மற்றவர்களின் பதில் செயலானது விரைவானதாகவும் கோபம் மிகுந்ததாகவும் இருந்தது. "நீரும் கலிலேயனோ?" (7:52) அவர்கள் அவரை விளாசித் தள்ளிவிட்டார்கள். இப்படிப்பட்ட ஒரு தவறான பதில்செயலினால், நிக்கொதேமு இன்னமும், பெரும்பாலும், ஒரு இரகசிய சீஷராகவே இருந்தார் என்பதில் சிறிதளவே வியப்புள்ளது. இயேசுவின் (சரீர) அடக்கத்தின் பொழுது நாம் நிக்கொதேமுவைக் கடைசியாகக் காண்கின்றோம் (யோவா. 19:39, 40). அந்த வேளையில் அவர் அரிமத்தியா யோசேப்பு என்ற இன்னொரு இரகசிய சீஷருடன் சேர்ந்து, இயேசுவின் சரீரத்தைக் கல்லறையில் வைக்க ஆயத்தம் செய்தனர். இந்த வரலாற்றின் முடிவில், ஒரு நாளிரவில் புதிய பிறப்பைப் பற்றி இயேசு கலந்துரையாடி செய்யச் சொல்லி அழைத்திருந்ததை, தம்முடைய விசுவாசத்தை "வெளிப்படையாகக் காட்டியதன்" மூலம் நிக்கொதேமு சிலவற்றைச் செய்தார்.

யோவான் சுவிசேஷத்தில் நிக்கொதேமு தோன்றும் மூன்று இடங்களில் நாம் காண்கின்ற படிப்படியான வளர்ச்சியின் காரணமாக, அவர், தங்களின்

விசுவாசத்தை வெளிப்படையாக அறிவிக்கத் தைரியத்தைக் காண்பதில் இடர்ப்பாடு கொண்டுள்ளவர்களுக்கு ஆர்வமுள்ள முன்மாதிரியாக இருக்கின்றார். புதுப்பிறப்பான ஞானஸ்நானமானது அதன் இயல் பினாலேயே ஒரு வெளியரங்கமான செயலாக உள்ளது. அது நாம் இயேசுவுக்குரியவர்கள் என்பதன் தீர்மானமான அறிவித்தலாக உள்ளது.

இன்றைய நாட்களில் நாம், நமது கலாச்சாரத்துடன் ஒன்றுகலந்து விடும்படியும், வித்தியாசமாய் கவனிக்கப்படாதிருக்கும்படியும் அதிகமாக கட்டாயப் படுத்தப்படுகின்றோம். கிறிஸ்தவர்கள் "ஏற்றுக் கொள்ளப் பட்ட" நிலையில் இருக்க விரும்பி, "சாதாரணமானவர்கள்" என்று காணப்படுவதையும் விரும்பி, சில வேளைகளில் நாம் யாராயிருக்கிறோம் என்பதுடன் உடன்பாடு செய்து கொள்கின்றவர்களாய் உள்ளனர். அவ்வாறு செய்வதில் நாம், ஞானஸ்நானம் பெறுதலின் மூலம் தைரியமாய் அறிவித்த உறுதிப்பாட்டையே மறுக்கின்றோம். கெட்ட வார்த்தை பேசுதல், மதுபானம் அருந்துதல், வாழ்க்கையில் சுயமையம் கொண்ட அணுகுமுறை போன்ற கருத்துகள் எதுவாயிருப்பினும் அதை விட்டு வெளியேறி நின்று நமது விசுவாசத்தில் வெளிப்படையாய்ச் செல்ல வேண்டுமென்று இயேசு நம்மை அழைக்கின்றார்!

## புதிய பிறப்புக்கு வழி நடத்துகின்ற விசுவாசம்

பழைமை வாதப் பத்திரிகையாளரான கால் தாமஸ் என்பவர் செய்திப் பணியில் உள்ள தம் நண்பர்களின் மத்தியில் ஆழமான கிறிஸ்தவ உறுதிப்பாடுகள் கொண்ட மனிதர் என்று அறியப்படுகின்றார். கிறிஸ்தவர் என்று அறியப்பட்ட ஒரு மனிதர் ஈடுபட்டிருந்த நிகழ்ச்சி பற்றிய செய்தியொன்று ஒருமுறை வெளியான போது, தாமஸுடன் பணியாற்றும் ஒருவர் அவரிடத்தில், "கால், நீங்கள் மீண்டும் பிறந்த கிறிஸ்தவரா?" என்று கேட்டார். பதிலுக்கு இவர், "அதன் மூலம் நீங்கள் அர்த்தப்படுத்துவது என்ன?" என்று கேட்டார். அந்த நண்பருக்குத் தமது வினா எதனை அர்த்தப்படுத்தியது என்பது பற்றிய கருத்து எதுவும் இல்லை, எனவே தாமஸ், "ஆம், நான் மீண்டும் பிறந்தவன் தான், ஆனால் 'மீண்டும் பிறத்தல்' என்பதின் மூலம் நான் எதனை அர்த்தப்படுத்துகிறேன் என்று உங்களுக்குக் கூற அனுமதியுங்கள்' என்றார்."[6]

### தேவனுடைய வல்லமை

புதிய பிறப்பென்பது, தேவனுடைய வல்லமையுடன் தொடங்கி முடிகின்றது. பரிசுத்த ஆவியானவரின் வல்லமையின் காரணமாக புதிய பிறப்பு சாத்தியமாகிறது மற்றும் கிடைக்கிறது என்று நிக்கொதேமுவுக்கு இயேசு அறிவித்தார் (3:6-8). தேவனுடைய ஆவியானவர் நமக்கு முதலிடத்தில் கிடைக்கின்றார் என்பது எவ்வளவாய் நம்புதற்கரியதாக உள்ளது என்பதை நாம் மறந்து விடுமளவுக்கு, தேவனுடைய ஆவியானவரைப் பெறுவது எப்படி என்பதில் நாம் பிடிப்பட்டுப் போக முடியாது!

மீண்டும் பிறத்தல் என்பது தேவனுடைய வல்லமையில் வேரூன்றி யிருப்பதால், அது நமக்கு நமது வாழ்வில் உண்மையான மற்றும் குறிப்பிடத்தக்க மாற்றத்திற்கான நம்பிக்கையையும் கொடுக்கின்றது. பல ஆண்டுகளாகப் பார்த்திராத நமது பழைய நண்பர்களைக் காண நாம் திட்டமிடும் பொழுது, அவர்கள் எவ்வளவாய் மாறியிருப்பார்கள் என்று நாம் எப்பொழுதுமே வியப்படைவதுண்டு. பல ஆண்டுகளுக்கு முன் அவர்களை அறிந்திருந்தது, மற்றும் அவர்களின் அடிப்படை ஆளுமைத் தன்மைகளுடன் பழக்கப்பட்டிருந்துள்ள நமக்கு, அவர்கள் இன்னமும் இருபது அல்லது நாற்பது ஆண்டுகளுக்கு முன் நாம் அறிந்திருந்த அதே மக்களாகவே இருப்பார்கள் என்று யூகித்துக் கொள்வது சுலபமானதாக உள்ளது. அவர்கள் தங்கள் வாழ்வில் தீவிரமான மாற்றங்களை அனு பவித்திருக்க முடியுமா? கிறிஸ்தவர்களுக்கு "ஆம்!" என்பதே மீண்டும் ஒலிக்கும் பதிலாக உள்ளது. தேவனுடைய வல்லமையினால் நாம் மாற்றப்பட்டுக் கொண்டிருக்கின்றோம்.

## இயேசுவில் விசுவாசம்

விசுவாசம் என்பது புதிய பிறப்பின் இன்றிமையாத அம்சமாக உள்ளது. இந்த விசுவாசம் என்பது இயேசுவைப் பற்றிய ஏதோ ஒரு தீர்மானம் அல்ல (3:2), ஆனால் இது அவரைத் தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று நம்புவதற்கான தீர்மானமாகும் (20:31). இந்த விசுவாசத்தை, வனாந்தரத்தில் மோசே வெண்கலச் சர்ப்பத்தை உயர்த்திய பொழுது இஸ்ரவேலர்கள் கொண்டிருக்கும்படி கேட்டுக் கொள்ளப்பட்ட விசுவாசத்துடன் இயேசு ஒப்பிட்டார் (3:14; எண். 21:4-9). அந்த வேளையில் இஸ்ரவேலர்கள் தங்களை வனாந்திரத்திற்குக் கொண்டு வந்ததனால் மோசேக்கும் தேவனுக்கும் எதிராக முறுமுறுத்துக் கொண்டிருந்தார்கள். அவர்களின் குற்றச்சாட்டுகளினால் சலிப்புற்ற தேவன், கொள்ளிவாய்ச் சர்ப்பங்களை அவர்களின் பாளையத்திற்குள் அனுப்பினார், மற்றும் மக்களில் பலர் அவைகளினால் கடிக்கப்பட்டு இறந்தார்கள். மக்கள் அதிலிருந்து விடுபடுவதற்காகத் தேவனை நோக்கிக் கதறினார்கள், மற்றும் வெண்கலச் சர்ப்பம் ஒன்றை ஒரு கோலில் உயர்த்தும்படி மோசே அறிவுறுத்தப்பட்டார். பாம்பினால் கடிபட்டவர்கள் வெண்கலச் சர்ப்பத்தை நோக்கிப் பார்த்தால், அவர்கள் சாக மாட்டார்கள். இந்தச் செயலுக்குப் போதிய அளவு விசுவாசம் தேவைப்பட்டது; ஆனால் அவர்கள் (அதை) நோக்கிப் பார்த்த பொழுது, தேவனுடைய வல்லமையினால் குணமாக்கப்பட்டனர். இயேசு சிலுவை யில் "உயர்த்தப்பட்டார்" (யோவா. 12:32, 34) மற்றும், விசுவாசத்தினாலும் கீழ்ப்படிதலினாலும் அவரை உற்றுப் பார்க்கின்றவர்களும், தேவனுடைய வல்லமையினால் இரட்சிக்கப்படுகின்றார்கள்!

## அறிவிக்கப்பட்ட ஒரு தீர்மானம்

தேவனுடைய வல்லமையினால் புதிய பிறப்பு சாத்தியமாகின்றது. அது இயேசுவின் மீது ஒருவர் கொள்ளும் விசுவாசத்தினால் தூண்டப்பட்டு

முன்னேற உதவுகின்றது (3:16). இருப்பினும், விசுவாசிக்கும்படியான தீர்மானமானது ஞானஸ்நானத்தில் வெளிப்படையாக அறிக்கையிடப்படும் பொழுதும், ஒருவர் "நீரினாலும் ஆவியினாலும் பிறக்கும்" (3:5) பொழுதும் மட்டுமே அது உணர்ந்தறியப்படுகின்றது. இந்தத் தீர்மானமான செயல்பாடானது ஒரு நபருக்கும் தேவனுக்கும் உள்ள புதிய உறவின் தொடக்கமாகவும், அந்த நபருக்கும் சபை என்ற இயேசுவில் விசுவாசமுள்ள மற்ற விசுவாசிகளின் சமூகத்திற்கும் இடையில் உள்ள புதிய உறவின் தொடக்கமாகவும் அடையாளப்படுத்தப்படுகின்றது. புதிய பிறப்பு என்பதில் இயேசு கிறிஸ்துவின் மீதுள்ள தனிப்பட்ட விசுவாசம் அடங்கியுள்ளது, ஆனாலும் அந்தத் தனிப்பட்ட விசுவாசத்தை ஞானஸ்நானம் என்ற வெளியரங்கமான செயலினால் வெளிப்படுத்த வேண்டியது அவசியமாகும் (மாற். 16:15, 16; அப். 2:38; 22:16).

## முடிவுரை

நாம் இப்பொழுது படித்துள்ள வேத பாடப் பகுதியில் இருந்து அடிக்கடி பிரசங்கம் செய்த ஜார்ஜ் ஒயிட்ஃபீல்ட் (1714-70) பற்றிய நிகழ்ச்சியொன்று கூறப்படுகின்றது. ஒரு நாள், அவருடைய நண்பர் ஒருவர் அவரிடம், "ஜார்ஜ், நீங்கள் ஏன் மிகவும் அடிக்கடி 'நீங்கள் மறுபடியும் பிறக்க வேண்டும்' என்ற வேத வசனத்தின் மீதே பிரசங்கம் செய்கின்றீர்கள்?" என்று கேட்டார். அதற்கு ஒயிட்ஃபீல்ட் மிக உறுதியாக, "ஏனென்றால், நீங்கள் *கட்டாயம்* மறுபடியும் பிறக்க வேண்டும்" என்று பதில் அளித்தார்.

இயேசு மிகச் சிறந்த மனிதர், மாபெரும் போதகர், ஆனால் தேவகுமாரன் எனப்படுவதைக் காட்டிலும் சிறியவர் என்று நம்பும் யாவருக்கும் இயேசு, "நீங்கள் மறுபடியும் பிறக்க வேண்டும்" என்று கூறுகின்றார்.

அடிப்படையான நற்பண்புகள் கொண்டிருத்தல் தேவனுக்கு முன்பாகப் போதுமானது என்று நினைக்கும் யாவருக்கும் இயேசு, "நீங்கள் மறுபடியும் பிறக்க வேண்டும்" என்று கூறுகின்றார்.

தங்கள் கலாச்சார மதங்களுடன் ஆறுதலாய் இருக்கின்ற யாவருக்கும் இயேசு, "நீங்கள் மறுபடியும் பிறக்க வேண்டும்" என்று கூறுகின்றார்.

சுயமான, தனிப்பட்ட மதத்தை மட்டுமே நாடும் யாவருக்கும் இயேசு, "நீங்கள் மறுபடியும் பிறக்க வேண்டும்" என்று கூறுகின்றார்.

ஞானஸ்நானத்தை அர்த்தமற்ற, ஏற்புடையதல்லாத வரலாற்று நினைவுச் சின்னமாக நோக்கும் யாவருக்கும் இயேசு, "நீங்கள் மறுபடியும் பிறக்க வேண்டும்" என்று கூறுகின்றார்.

---

குறிப்புகள்

[1]யோவான் சுவிசேஷத்தில் இவ்விடத்தில் மட்டுமே நாம் "தேவனுடைய இராஜ்யம்" என்பதைக் காண்கின்றோம். அவர் இதே கருத்தை விளக்குவதற்கு

*''ஜீவன்'' அல்லது ''நித்திய ஜீவன்'' என்பதைப் பயன்படுத்தினார்.* [2]*"உன்னதத்திலிருந்து" என்று அர்த்தப்படுகின்ற 3:31ஐக் காணவும்.* [3]*Webster's Ninth New Collegiate Dictionary* (1988), s.v. "Religion." [4]Ibid. [5]*"நீரினால் பிறத்தல்" என்ற சொற்றொடரானது ஞானஸ்நானத்தைத் தெரிவித்தது, இது ஏற்கனவே யூதர்களுக்கு பழக்கப்பட்ட ஒரு நடைமுறையாகவும், யோவான் ஸ்நானனின் நிமித்தமாக அப்போது கலந்துரையாடலில் காணப்பட்ட ஒரு தலைப்பாகவும் இருந்தது, 1:25; 3:22-26; 4:1-3ஐக் காணவும்.* [6]"Shepherding, Servanthood and Success," *Pastor to Pastor,* vol. 13 (Colorado Springs, Colo.: Focus on the Family, 1994), sound cassette.

## யோவான் சுவிசேஷத்திற்கு ஒரு மூன்று வசனப் புறக்குறிப்பு

*பண்டிகையின் கடைசி நாளாகிய பிரதான நாளிலே இயேசு நின்று, சத்தமிட்டு: ஒருவன் தாகமாயிருந்தால் என்னிடத்தில் வந்து, பானம்பண்ணக்கடவன். வேதவாக்கியம் சொல்லுகிறபடி என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ, அவன் உள்ளத்திலிருந்து ஜீவத் தண்ணீருள்ள நதிகள் ஓடும் என்றார். தம்மை விசுவாசிக்கிறவர்கள் அடையப் போகிற ஆவியைக் குறித்து இப்படிச் சொன்னார். இயேசு இன்னும் மகிமைப்படாதிருந்தபடியினால், பரிசுத்த ஆவி இன்னும் அருளப்படவில்லை (7:37-39).*

*1. ''பானம்பண்ணுதல்'' (7:37) என்பது சமாரியப் பெண்ணையும் (4:4-42), ஜீவ அப்பம் பற்றிய பிரசங்கத்தையும் (6:25-59) மற்றும் இயேசுவில் விசுவாசம் கொள்ளும்படியான வேண்டுகோளையும் நமக்கு நினைவூட்டுகின்றது.*

*2. ''விசுவாசித்தல்'' (7:38) என்பது, விசுவாசத்தைக் கட்டியெழுப்புதலாய் இருப்பதே இந்த சுவிசேஷத்தின் நோக்கம் என்பதை மீண்டும் நமக்கு நினைவூட்டுகின்றது (20:31).*

*3. "ஜீவத் தண்ணீர்" (7:38) என்பது, இயேசு சமாரியப் பெண்ணுக்குக் கூறியதும் (4:13, 14) மற்றும் ''ஜீவன்'' அளிப்பதுமான விஷயத்தின் நினைவூட்டுதலாக உள்ளது.*

*4. ''ஆவி'' (7:39) என்பது இந்தப் புத்தகத்தின் பிற்பகுதியில் வருவதாயிருந்த பரிசுத்த ஆவியானவரின் மேலான வலியுறுத்தத்தின் ஒரு முன் நிழலைத் தருகின்றது (14:15-26; 16:5-15).*

*5. "மகிமைப்படுதல்" (7:39) - யோவான் சுவிசேஷம் முழுவதுமே இயேசுவில் தேவனுடைய மகிமையைக் காணுதல் பற்றியதாகவே உள்ளது. மகிமையின் நிறைவான தரிசனமானது சிலுவையில் காணப்படுகின்றது.*